258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் நிறுவனத்தை SLIM-Nielsen Peoples Awards 2021 மக்கள் தெரிவு விருதுகள் நிகழ்வில் இலங்கை நுகர்வோர் ஏகோபித்த குரலில் தெரிவு செய்துள்ளனர்

*லை∴ப்போய், சிக்னல் மற்றும் லாவோஜி ஆகியவற்றுக்கு அமோக வெற்றி*

விரைவாக விற்பனையாகின்ற நுகர்வோர் தயாரிப்புக்களைப் பொறுத்தவரை, நாட்டின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்ற யூனிலீவர் ஸ்ரீலங்கா, தனது மூன்று வர்த்தகநாமங்கள், SLIM-Nielsen Peoples Awards 2021 மக்கள் தெரிவு விருதுகள் 2021 நிகழ்வில் இனங்காணல் அங்கீகாரத்தை சம்பாதித்துள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளது. இந்த இனங்காணல் அங்கீகாரங்களில் லாவோஜிக்கு 'Hot Beverage Brand of the Year' (ஆண்டின் மிகச் சிறந்த சூடான பான வகை வர்த்தகநாமம்), லை∴ப்போய்க்கு 'Personal Care Brand of the Year' (ஆண்டின் மிகச் சிறந்த தனிப்பட்ட பராமரிப்பு வர்த்தகநாமம்) மற்றும் 'Advertisement of the Year' (ஆண்டின் மிகச் சிறந்த விளம்பரம்) ஆகிய விருதுகளும், மற்றும் லை∴ப்போய், சிக்னல் ஆகிய இரண்டிற்கும் பெருமதிப்பு மிக்க 'FMCG Brand of the Year' (ஆண்டின் மிகச் சிறந்த விரைவாக விற்பனையாகின்ற வர்த்தகநாமம்) விருதும் அடங்கியுள்ளன.

நுகர்வோரின் அங்கீகாரமானது நிறுவனம் அதன் வர்த்தகநாமங்களின் கருப்பொருளாக தொடர்ந்தும் நீடித்துள்ள நோக்கம் சார்ந்த முயற்சிகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து நெருக்கமானதாகவும், பொருத்தமானதாகவும் இருப்பதே காரணமாகும். பிரதான சுகாதார வர்த்தகநாமமான லை∴ப்போய் அண்மைக்காலங்களில் இலங்கை மக்களைப் பாதுகாத்து வருவதுடன், நாடு முழுவதும் 2.5 மில்லியனுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த கை கழுவும் பழக்கத்தை போதித்துள்ளது. இலங்கையின் பிரதான வாய்ச்சுகாதார பராமரிப்பு வர்த்தகநாமமான சிக்னலின் 'Sina Bo Wewa' நிகழ்ச்சித்திட்டமானது நாடு முழுவதும் பாடசாலைகளை எட்டும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாரிய அளவிலான பற்சிகிச்சை மையங்கள் மூலமாக 2 மில்லியனுக்கும் அதிகமான இலங்கை மக்களுக்கு வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்தும் அறிவை நேரடியாக வளர்த்துள்ளது. லாவோஜி 'brew that bonds' (தேநீர் மூலமான அன்புப் பிணைப்பு) என்ற வகிபாகத்துடன், சமூக அரவணைப்புக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதுடன், ஒரு கோப்பை சுவையான தேநீர் மூலமாக மக்களை ஒன்றிணைக்கும் நோக்கத்தை சிறப்பாக முன்னெடுப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

**அழகுபடுத்தல் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரான நிலூஷி ஜெயதிலக** அவர்கள் கூறுகையில், *''தினந்தோறும் எங்கள் வர்த்தகநாமங்கள் மூலம் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு, எங்கள் நுகர்வோருக்கு பொருத்தமானதாக இருக்கச் செய்ய வேண்டும் என்ற எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்ற இந்த கௌரவத்தையிட்டு நாம் உண்மையில் நெகிழ்ச்சி அடைந்துள்ளோம். எங்கள் வர்த்தகநாமங்களை நம்பிக்கையுடன் தொடர்ந்து போற்றும் எங்கள் நுகர்வோரை நாம் மனமாரப் போற்றுகின்றோம். எங்கள் முயற்சிகளுக்கு இனங்காணல் அங்கீகாரத்தை சம்பாதிப்பதற்கு வாய்ப்பை வழங்கிய SLIM மற்றும் Nielsen ஆகியவற்றுக்கும் மனமார்ந்த நன்றிகள்,''* என்று குறிப்பிட்டார்.

**வீட்டு பராமரிப்பு, உணவு, பான வகை மற்றும் நீர் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரான ஷர்மிளா பண்டார** அவர்கள் கூறுகையில், *''இது உண்மையில் மிகவும் சன்மானமளிக்கும் ஒரு அங்கீகாரமாகும். எமது செயற்பாடுகள் அனைத்திலும் நடுநாயகமாக எங்கள் நுகர்வோர் எப்போதும் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் வளர்ந்து வரும்*

*தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும், பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் நோக்கத்தின் அடிப்படையிலான வர்த்தகநாமங்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற எங்கள் உயர்தர தயாரிப்புகள் மூலம் அவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்து அனைத்து வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த இனங்காணல் அங்கீகாரங்கள் அதற்கு சிறந்ததொரு சான்றாகும்,''* என்று குறிப்பிட்டார்.

SLIM-Nielsen Peoples Awards மக்கள் தெரிவு விருதுகள் இலங்கையின் பிரதான சந்தைப்படுத்தல் விருது வழங்கும் நிகழ்வாகும். இலங்கையில் உள்ள Nielsen Research Agency என்ற ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையம் (Sri Lanka Institute of Marketing - SLIM) இதனை ஏற்பாடு செய்து வருகின்றது. இது இலங்கை மக்களின் மனதில் ஆழமாக பதிந்துள்ள வர்த்தகநாமங்கள் மற்றும் தனிநபர்களை இனங்கண்டு அங்கீகாரமளித்து வருகின்றது.

**~ (முற்றும்) ~**